**அரியலூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் திரு.இரா.ஜெய்னுலாப்தீன். எம்.எஸ்.சி.**

ந.க.எண்.அ3/6750/2019 நாள். 28.12.2021

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் – அரியலூர் மாவட்ட வருவாய் அலகு – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்ட உஷாராணி(திருமதி).ப என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை:
1. சென்னை, உயர்நீதிமன்றம் வழக்கு W.A.No.75 of 2016 and C.M.P.No.420 of 2016 தீர்ப்புரை நாள்.25.01.2016
2. அரசாணை (3டி) எண்.142 வருவாய் (பணி–9(3)) துறை நாள்.20.12.2016
3. சென்னை, உயர் நீதிமன்றம் சிறப்பு சட்ட வழக்கறிஞரின் சட்ட கருத்துரு எண்.480/2018 நாள்.23.11.2018
4. அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். அ3/6803/2018 நாள். 04.02.2019
5. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள். 26.02.2021
6. சென்னை, கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண். ஆ.கு.3/18395/2020 நாள். 03.11.2021

********

**ஆணை**

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், அணிக்குதிச்சான் கிராம உதவியாளராக பணியாற்றி பணியிடையே கடந்த 21.04.2008 அன்று இறந்துபோன (லேட்) திரு.சி.பரமசிவம் என்பவரது மகள் திருமதி.ப.உஷாராணி என்பவருக்கு பார்வை 1–ல் காணும் உயர்நீதிமன்றம் தீர்ப்புரை, பார்வை 2–ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 3–ல் காணும் சட்டகருத்துவை அடிப்படையாக கொண்டு பார்வை 4–ல் காணும் செயல்முறைகளின் படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கியதன்பேரில் தனியர் இளநிலை வருவாய் ஆய்வாளராக 20.02.2019 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

2) பார்வை -5ல் காணும் அரசாணை மற்றும் பார்வை-6ல் காணும் கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் "02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்த வித விதித்தளர்வும் தேவைப்படாத பணியாளர்களுக்கு சம்பந்தப்பட்ட பணிநியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு தொடர்புடைய அரசுப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) எனவே, பார்வை -5ல் காணும் அரசாணை மற்றும் பார்வை -6ல் காணும் கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கிணங்க, திருமதி.ப.உஷாராணி என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியில் சேர்ந்த நாளான 20.02.2019 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணி வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. மேலும், தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஒ.ம்/-)இரா.ஜெய்னுலாப்தீன்,
மாவட்ட வருவாய் அலுவலர்
அரியலூர்.

//உத்தரவுப்படி//

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது).

பெறுநர்:

திருமதி.ப.உஷாராணி,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
ஆதிதிராவிடர் நலம் தனிவட்டாட்சியர் அலுவலகம்,
அரியலூர். (அலுவலர் மூலமாக)

நகல்: தனி வட்டாட்சியர்,
ஆதிதிராவிடர் நல அலுவலகம்,
அரியலூர்

நகல்: "அ3" இருக்கைக்கு